மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22 ஆம் நாள் வியாழக்கிழமை
இ.ம.எண்.04/2023
அ.வ.எண்.69/2020

A.ஜெயந்தி ...மனுதாரர்/வாதி

/எதிராக/

1. A. ராஜம்மாள்
2. A. மோகன்ராஜ்
3. A. அருள்குமார்
4. பேபி (எ) சாந்தி ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 09.08.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.M.வெங்கடாஜலம் அவர்கள் ஆஜராகியும், 1, 3 மற்றும் 4ம் எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்களாகவும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.மணிகண்ட ஜெயக்குமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் பிரிவு 151ன் கீழ் வழக்குரையில் திருத்தங்கள் மேற்கொள்ள உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

மனுதாரரால் பாகபிரிவினை, தனி சுவாதீனம் பரிகாரங்கள் கோரி எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் உள்ள நிலையில், பூர்வீக கூட்டு குடும்ப சொத்துகளான தாவா சொத்துகள் மனுதாரர் மற்றும் அவரது தகப்பனார் மற்றும் 2 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கு தலா 1/5 பாகம் பாகமாக ஒதுக்கப்பட்டது. மனுதாரரின் தகப்பனார் இறந்ததற்கு பின்னிட்டு அவரது பாகமான 1/5 பாகத்தை மனுதாரரும், எதிர்மனுதாரர்களும் சரிசமமாக பிரித்து

கொண்டனர். மேற்படி இறந்த மனுதாரரின் தந்தைக்கு பூர்வீக சொத்தில் பாத்தியப்பட்ட 1/5 பாகத்திலிருந்து தான் மனுதாரரின் தாயாருக்கு 1/5 பாகம் பாத்தியப்பட்டதாகும். மொத்த சொத்துக்களிலிருந்து பாத்தியப்பட்டதல்ல. அதன்படி மனுதாரருக்கு தாவா சொத்துக்களில் 6/25 பாகம் பாத்தியப்பட்டுள்ளது. ஆனால் வழக்கு தாக்கல் செய்துள்ள சமயத்தில், 6/25 பாகத்திற்கு பதிலாக மனுதாரரால் 1/5 பாகம் உள்ளதாக தவறுதலாக குறிப்பிட்டு, வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி தவறை சரிசெய்து வழக்குரையை திருத்த உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2) <u>2ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

(i) இம்மனு பொய்யானது. சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. வழக்கு சொத்துகளில் பாக உரிமை கோர மனுதாரருக்கு உரிமை இல்லை என எதிர்மனுதாரர் கூறும் நிலையில், பாகவிகிதம் தவறாக கோரியதை தற்போது மாற்ற வேண்டும் என கேட்க மனுதாரருக்கு உரிமை இல்லை. வழக்கு விசாரணைக்கு போடப்பட்ட நிலையில் தற்போது இரண்டு ஆண்டுகள் கழித்து மனுதாரருக்கு வழக்கில் வெற்றி பெற வாய்ப்பில்லை என்பதை நன்கு தெரிந்து கொண்டு தற்போது 2023ல் வழக்கை காலதாமதப்படுத்த நிலைக்கத்தகாத மனுவை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார்.

(ii) மேலும் எந்த காரணமும் இல்லாமல் வழக்கின் தன்மையை முற்றிலும் மாற்றும் வகையில் புதிய பாகவிகிதத்தை கூறி, பாக உரிமையே இல்லாத மனுதாரர் திருத்தப்பாடு கோருவது எந்த விதத்திலும் ஏற்கத்தக்கதல்ல. என்ன காரணத்திற்காக ஏற்கனவே தற்போது கூறும் திருத்தப்பாட்டை மனுதாரர் வழக்குரையில் கூறாமல் விட்டதற்கான காரணம் எதுவும் பிரமாண பத்திரிக்கையிலும், திருத்தப்பாட்டு மனுவிலும் கூறப்படவில்லை. எனவே மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 2ம் எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் மற்றும்

எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, ஆவணச் சாட்சியங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர் தரப்பில் பூர்வீக கூட்டு குடும்ப சொத்துகளான தாவா சொத்துகள் மனுதாரர் மற்றும் அவரது தகப்பனார் மற்றும் 2 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கு தலா 1/5 பாகம் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றும், மனுதாரரின் தகப்பனார் இறந்ததற்கு பின்னிட்டு அவரது பாகமான 1/5 பாகத்தை மனுதாரரும், எதிர்மனுதாரர்களும் சரிசமமாக பிரித்து கொண்டனர் என்றும், மேற்படி இறந்த மனுதாரரின் தந்தைக்கு பூர்வீக சொத்தில் பாத்தியப்பட்ட 1/5 பாகத்திலிருந்து தான் மனுதாரரின் தாயாருக்கு 1/5 பாகம் பாத்தியப்பட்டது என்றும், மொத்த சொத்துக்களிலிருந்து பாத்தியப்பட்டதல்ல என்றும், அதன்படி மனுதாரருக்கு தாவா சொத்துக்களில் 6/25 பாகம் பாத்தியப்பட்டுள்ளது என்றும், ஆனால் வழக்கு தாக்கல் செய்துள்ள சமயத்தில், 6/25 பாகத்திற்கு பதிலாக மனுதாரரால் 1/5 பாகம் உள்ளதாக தவறுதலாக குறிப்பிட்டு, வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே வழக்குரையை மனுவில் கண்டவாறு திருத்த மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(ii) 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் பாகவிகிதம் தவறாக கோரியதை தற்போது மாற்ற வேண்டும் என கேட்க மனுதாரருக்கு உரிமை இல்லை என்றும், வழக்கை காலதாமதப்படுத்த நிலைக்கத்தகாத மனுவை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார் என்றும், மேலும் எந்த காரணமும் இல்லாமல் வழக்கின் தன்மையை முற்றிலும் மாற்றும் வகையில் புதிய பாகவிகிதத்தை கூறி, பாக உரிமையே இல்லாத மனுதாரர் திருத்தப்பாடு கோருவது எந்த விதத்திலும் ஏற்கத்தக்கதல்ல என்றும், என்ன காரணத்திற்காக ஏற்கனவே தற்போது கூறும் திருத்தப்பாட்டை மனுதாரர் வழக்குரையில் கூறாமல் விட்டதற்கான காரணம் எதுவும் பிரமாண பத்திரிக்கையிலும், திருத்தப்பாட்டு மனுவிலும் கூறப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(iii) இவ்வழக்கின் சங்கதிகளை பரிசீலனை செய்கையில் மனுதாரரால் பாகபிரிவினை, தனி சுவாதீனம் பரிகாரங்கள் கோரி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் மனுதாரர் தரப்பில் தனக்கு தாவா சொத்தில் 6/25 பாகத்திற்கு பதிலாக தவறுதலாக 1/5 பாகம் உள்ளதாக வழக்குரையில் தவறாக குறிப்பிடப்பட்டுவிட்டது எனவும், அதனால் வழக்குரையில் பாக அளவை திருத்த அனுமதித்து உத்தரவிடக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரருக்கு தாவா சொத்தில் பாக உரிமையே இல்லாத நிலையில், பாக விகிதம் தவறாக உள்ளது என கூறி, தாவாவை திருத்த கோருவது ஏற்கத்தக்கதல்ல எனவும், வழக்கின் தன்மை முற்றிலும் மாறுபடும் வகையில் புதிய பாக விகிதத்தை திருத்தக் கோருவது ஏற்கத்தக்கதல்ல எனவும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(iv) இந்நிலையில் மனுதாரர் தன் மனு பிரமாணப்பத்திரிக்கையில், தன் தந்தையின் 1/5 பாகத்திலிருந்து தான் தன் தாயாருக்கு 1/5 பாகம் உள்ள நிலையில், மொத்த சொத்திலிருந்து 1/5 பாகம் உள்ளதாக கணக்கிட்டு, வழக்குரையில் பாக அளவு தவறாக குறிப்பிடப்பட்டுவிட்டது என குறிப்பிடப்பட்டுள்ள காரணம் ஏற்கத்தக்க வகையில் உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் பாக அளவில் திருத்தம் செய்வதால் வழக்குமூலத்திலோ, வழக்கின் தன்மையிலோ எவ்வித மாற்றமும் ஏற்படப் போவதில்லை எனவும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

(v) மேற்கண்ட சங்கதிகளை கருத்தில் கொள்கையிலும், இவ்வழக்கில் விசாரணை துவங்கப்படாத நிலையிலும், மனுதாரர் வழக்குரை திருத்தத்தை மேற்கொள்ளும் பட்சத்தில் அதுகுறித்து கூடுதல் பதிலுரை தாக்கல் செய்யவோ, சாட்சியங்களை முன்னிலைப்படுத்தவோ வாய்ப்பு வழங்கப்படும் என்பதாலும், மனுதாரர் கோரும் திருத்தங்கள் அனுமதிக்கத்தக்கது என்றும், மேற்படி திருத்தங்களை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதகமான சூழ்நிலையும் ஏற்பட வாய்ப்பில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளையும், நீதியின் நலனையும் கருத்தில் கொள்கையில், மனுவில்

கோரியுள்ள திருத்தமானது இருதரப்பினரிடையே உள்ள உண்மையான பிரச்சனையை தீர்க்கும் வகையில் உள்ளதால் இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2024.08.22 16:50:10 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:— இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:— </u> இல்லை

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2024.08.22 16:50:18 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.